## <u>சந்தைகள்:</u>

வேலூர் மாநகராட்சியில் நான்கு மண்டலங்களிலும் தனிதனியாக சந்தைகள் இயங்குகின்றது. தாரபடவேடு சந்தை, நேதாஜி சந்தை, குட்டைமேடு சந்தை, சேண்பாக்கம் சந்தை, மீன் இறைச்சி சந்தைகள் உள்ளன. இச்சந்தைகள் பொது ஏலம் மூலம் முன்றாண்டுகளுக்கு குத்ததை விடப்பட்டு, ஆண்டு குத்தகை தொகையில் 5% சதவீதம் உயர்வு செய்து தொகை வசூல் செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மூன்று ஆண்டுகள் முடிவடைந்தப் பிறகு இந்த குத்தகை இனங்ககுக்கு மறு ஏலம் விடப்படுகிறது. நிரந்தர கடைகளின் வாடகை வசூல் மாநகராட்சி பணியாளர் மூலம் தொடர்ந்து வசூலிக்கப்பட்டு வருகிறது.